பிற்பகல் 1-20

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டுமென்ற தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது,

மாண்புமிகு நிதி அமைச்சர்,

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனிப் பாதுகாப்புப் படைப் பிரிவுச் சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன வடிவு எண் 12/1993) நிறைவேற்றப்பெற வேண்டும்'' எனக் கோருகிறேன்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க, (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்,

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன் வடிவு ஏற்கப்பட்டது.

(எ) கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன் வடிவு 1993,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1993-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன் வடிவு எண் 13/1993), மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்,

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 13/1993) ஆய்வுக்கு * எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்'' எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு, வே, தம்புசாமி,

திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இந்தக் கூட்டுறவு தனி அதிகாரி நியமன சட்ட முன்வடிவில் கருத்துக்களைச் சொல்ல அனுமதித்த தங்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன், இன்றையதினம் கூட்டுறவு ஸ்தாபனம் என்பது தொடர்ந்து அதனுடைய நிர்வாகத்தில் பாதிப்பு ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. இருக்கக்கூடிய அதிகாரிகள் கூட்டுறவுத் துறையில் தங்கள் இஷ்டம்போல் செயல்படக் கூடிய சூழ்நிலை இருப்பதன் விளைவாக, அந்தந்தப் பகுதிகளில் இருக்கிற கூட்டுறவு ஸ்தாபனங்களின் மூலமாக விவசாயிகளுக்கும் கிடைக்கக்கூடிய பல்வேறு சலுகைகள் இன்றையதினம் முழுமையாகக் கிடைக்காமல். தங்களுக்கு வேண்டியவர்களுக்கு வழங்கக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. அப்படிப்பட்ட சூழ்நிலை மாற்றப் பட வேண்டுமென்று சொன்னால் ஜனநாயக முறைப்படி தேர்தல் நடத்தப்பட வேண்டும். அப்படி தேர்தல் நடத்துவதற்கு நீதி மன்றத்தில் தடையாணை இருக்கிறது என்று சொன்னாலும், தமிழக அரசைப் பொறுத்தவரையில் விரைவாகத் தலையிட்டு அந்த வழக்குகளை முடிவுக்குக்கொண்டுவந்து, விரைவில் தேர்தல் நடத்துவதன் மூலமாக எதிர்காலத்தில் எந்தக் கூட்டுறவு ஸ்தாபனங்களில் அங்கத்தினர்களாக இருக்கிறார்களோ, அவர்களுக்கு கிடைக்கக்கூடிய முழுமையான சலுகைகளைப் பெறுவதற்கு வாய்ப்பு வசதிகளை உருவாக்க முடியும். அந்தவகையில் விரைவாக தேர்தலைக்கொண்டு வரவேண்டும். ஏதோ கோர்ட்டில் தடையணை இருக்கிறது என்பதைக்காரணம் காட்டி, காலம் கடத்துவது என்பது எந்தவிதத்திலும் நியாயமாக இல்லை, அப்படி கோர்ட்டிலே தடையாணை இருப்பதற்கு அதிலே கூறியிருக்கிற அடிப்படையான காரணம், ஆளும் கட்சியில் இருக்கிறவர்களைத்தான் உறுப்பினர்களாக முழுமையாகச் சேர்த்தார்கள் என்பதாகும். இந்த நிலையில் இந்தப் பிரச்சினை உருவாக்கப்பட்டிருக்கிறது, அப்படிப்பட்ட நிலைமையைத் தவிர்த்து, விரைவாக தடையாணையை நீக்கி, அனைவருக்கும்

---

* 20—4—1993 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

உறுப்பினர்களாகிற உரிமையை வழங்கி, அந்த ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும், அதிலே உறுப்பினர்களாக இருக்கிறவர்கள் கடன் பெற்றிருந்தால், கடன் பாக்கி இருந்தால், அவர்கள் வாக்களிக்க உரிமையற்ற சூழ்நிலை இருக்கிறது, அப்படிப்பட்ட அந்த ஷரத்தை நீக்கி கடன் பெற்றிருந்தாலும். அவர்கள் அந்தக் கடனை எதிர்காலத்தில் திருப்பி கட்டிவிடுவார்கள் என்பதால், அந்தக் கடன் பெற்றிருக்கிற காரணத்தற்காக கடன் பாக்கி இருக்கிற காரணத்திற்காக அவர்களுக்கு வாக்களிக்கிற உரிமையை எந்த விதத்திலும் மறுக்கக் கூடாது, அப்படி மறுக்கப்பட்டு உறுப்பினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார்கள், அப்படி நீக்கப்பட்டிருக்கிற அந்த உறுப்பினர்களை மீண்டும் உறுப்பினர்களாக்குவதற்கு ஷரத்தை உருவாக்கி, அவர்களை உறுப்பினர்களாக்கி, அந்தத் தேர்தலை நடத்த முன் வர வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து முடிக்கிறேன், வணக்கம்,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

பிற்பகல் 1-25

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இந்தத் திருத்தச் சட்டத்தில் மாண்புமிகு உறுப்பினர் தம்புசாமி அவர்கள் பேசுகிறபோது இரண்டு கருத்துக்களைச் சொல்லி இருக்கிறார்கள், ஒன்று, இப்போது கூட்டுறவுத் தேர்தலை நடத்தாமல் இருப்பதற்குக் காரணம் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களை மட்டும் உறுப்பினர்களாக சேர்த்தார்கள், அதனால் அது நீதிமன்றத்திற்குச்சென்றது என்று சொல்லி இருக்கிறார்கள், உண்மை அதுவல்ல, உறுப்பினர்கள் எல்லோரையும் சேர்க்கச் சொல்லி வெளிப்படையாகவே அறிவித்தோம், எனவே நான் இந்த மன்றத்திலேயே அறிவித்திருக்கிறேன், பல பேர்கள் உறுப்பினர்களாக, பல கட்சியைச் சேர்ந்தவர்கள் சேர்ந்திருக்கிறார்கள், இதிலே ஆளும் கட்சி மட்டுமல்ல. எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்களும் சேர்ந்திருக்கிறார்கள், இதற்கு முன்னால் நடந்த நிலைமை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். அவர்களுடைய தோழமைக் கட்சியாக அன்றைக்கு இருந்தவர்கள் தேர்தல் என்று நடந்தால்-கூட்டுறவுத் தேர்தலில் தி.மு.க. மட்டும்தான் வெற்றி பெறவேண்டும். வேறு கட்சியே வெற்றி பெறக்கூடாது என்கிற சூழ்நிலையை அன்றைக்கு ஏற்படுத்தினார்கள், நிச்சயமாக புரட்சித் தலைவியின் ஆட்சி அப்படிப்பட்ட தவறைச் செய்யாது என்பதை நான் அவருக்குச் சொல்ல விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி), தேர்தல் நடந்தால். அது நியாயமான

தேர்தலாக, முறையான தேர்தலாக நடக்கவேண்டும் என்பதிலே இந்த அரசு உறுதியாக இருக்கிறது, ஆகவே யாரும் தகுதி உள்ளவர்கள் உறுப்பினர்களாக சேருவதை நாங்கள் தடுக்க மாட்டோம்,, தகுதியற்ற உறுப்பினர்கள் இருந்தார்கள். ineligible Members, அவர்களை நீக்கினோம். அதையும் இந்த அவையிலேயே நான் அறிவித்திருக்கிறேன், ஆகையினாலே, இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையிலே தி.மு.க. போட்டி போட்டால் வெற்றி பெற முடியாது என்கிற பயத்தின் காரணமாக தேர்தல் நடக்கிற நாள் அன்று, நாமினேசன் போட்ட பிறகு, அன்றைக்குச் சென்று தடை ஆணையைப் பெற்றார்கள். அது இன்றைக்கும் சுப்ரீம் கோர்ட்டிலே இருந்து கொண்டு இருக்கிறது. அதை விரைவாக சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு முடிந்த உடனேயே தேர்தலை நடத்தவேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள், அதற்கு அரசு தயாராக இருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடன் பாக்கி உள்ளவர்களைப் பற்றிச் சொன்னார்கள், இன்றைக்கு இருக்கிற சட்டத்தின்படி கடன் பாக்கி உள்ளவர்கள் போட்டியிடக்கூடாது என்பதுதான் கூட்டுறவுச் சட்டத்திலே இருக்கிற விதி, இதைச் சென்ற முறை தி.மு.க. ஆட்சியில் அதை ஓர் ஆண்டுக்கு தளர்த்தி வைத்தார்கள். அந்தத் தேர்தலுக்கு மட்டும் விதி தளர்த்தப்பட்டு யார் யார் பாக்கி உள்ள தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்களோ, அவர்களை எல்லாம் நிற்கவைத்து, வெற்றி பெறுவதற்காக அன்றைக்கு அந்தச் சட்டம் அந்தத் தேர்தலுக்கு மட்டும் தளர்த்தப்பட்டது. அது முடிந்தவுடனே பழையபடி இப்போது இருக்கிற நிலைமை, கடன்பாக்கி உள்ளவர்கள் தேர்தலிலே போட்டி போடமுடியாது என்பதாகும். இதுதான் கூட்டுறவு இயக்கத்தை வளர்ப்பதற்கு ஏற்றது. இல்லையானால் எல்லோரும் கடனை வாங்கிக் கொண்டு, பணத்தையும் கட்டாமல், அவர்களே மறுபடியும் அந்த சொசைட்டிக்கு தலைவர்களாகவோ, டைரக்டர்களாகவோ வந்தால் அந்தக் கூட்டுறவுச் சங்கம் ஒழுங்காக நடைபெறாது என்ற காரணத்தால்தான், அந்தச் சட்டத்தை நாம் அப்படியே விட்டு வைத்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதை ஏற்றுக் கொள்வார்கள் என்று நான் கருதுகிறேன்.

இந்த அரசைப் பொறுத்தமட்டில், கூட்டுறவு இயக்கம் பலப்படுத்தப்படவேண்டும். இன்னும் வளர்க்கப்படவேண்டும் என்பதிலே அதிகமான நம்பிக்கை வைத்திருக்கிறது. இதிலே எந்த யோசனையைச் சொன்னாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களோ, மற்ற எதிர்க் கட்சிகளோ நாங்கள் அதை ஏற்றுக்கொள்வதற்குத் தயாராக இருக்கிறோம். ஆனால், தேர்தல் நடந்தால், நாங்கள் மட்டுமே வெற்றி பெறவேண்டும்,

இல்லையானால், தேர்தலே நடத்தக் கூடாது என்று சொல்கிற, தி.மு.க.விடத்திலே தயவுசெய்து, அந்த உறவை நீங்கள் விட்டுவிடுவது நல்லது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக் கொண்டு, இந்த மசோதாவை நிறைவேற்றித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தம் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1993-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 13/1993) நிறைவேற்றப் பெற வேண்டும்''
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்ட முன்வடிவு ஏற்கப்பட்டது.

10 அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஊ) காமன்வெல்த் பாராளுமன்ற சங்க, தமிழகக் கிளையின் கூட்டம் நடைபெறுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று பகல் 12.30 மணி அளவில் நடைபெற இருந்த காமன்வெல்த் பாராளுமன்ற சங்க, தமிழகக் கிளையின் பொது உறுப்பினர்களுடைய கூட்டம், இன்று பேரவைக் கூட்டம் முடிந்தவுடன் நடைபெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

12. சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி.

(ஏ) கூடுதல் விற்பனை வரி (திருத்தச்) சட்ட முன்வடிவு 1993.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1993-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி (திருத்தச்) சட்ட முன்வடிவு, (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 14/1993), மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்,